**கவனிக்க.**– 2007.10.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1519 - 2007 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා - 2007.10.12

*1519 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | – | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 909 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஒற்றோபர் 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஒற்றோபர் 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு
ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
பகிரங்கப் போட்டிப் பரீட்சை - 2007

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு (இதன் பின்னர் "சேவை" எனக் குறிப்பிடப்படும்) பொருத்தமான பரீட்சார்த்திகளைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையொன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

2. **பரீட்சைத் திட்டமும் திகதியும்.**- பரீட்சை இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும்.

பகுதி *I* - பின்வரும் பாடங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சை 2007 திசெம்பரில் கொழும்பில் நடைபெறும் :-

(i) பொது வினாத்தாள்
(ii) உலக விவாகரங்கள் I (அரசியல்)
(iii) உலக விவகாரங்கள் II (பொருளாதாரம்)
(iv) கட்டுரை
(v) சுருக்கி எழுதுதல்
(vi) பலவினத்தேர்வு வினாத்தாள்

பகுதி *II*- எழுத்து மூலப் பரீட்சையில் ஆறு வினாத்தாள்களுக்குத் தோற்றி, ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 40 விகித புள்ளிகளைப் பெற்று, 330 க்கு குறையாத வெளிநாட்டு அலுவல்கள் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் வெட்டுப் புள்ளியைப் பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆயினும் அப்படி அழைக்கப்படுபவர்களின் தொகை நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்கிற்கு மேற்படுதல் ஆகாது. நேர்முகப் பரீட்சை 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும். எச்சந்தர்ப்பத்திலும் ஆகக்குறைந்த வெட்டுப் புள்ளிகள் குறைக்கப்படலாகாது.

3. **பணிக்கமர்த்தும் நியதிகள் :** (i)இப்பரீட்சையின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் பரீட்சார்த்திகள் அரசாங்க சேவையின் நியமனங்களுக்கான பொதுவான நிபந்தனைகள் மற்றும் 2001 ஆம் ஆண்டின் இலங்கை வெளிநாட்டுச் சேவையின் பிரமாணக் குறிப்புகள் அல்லது அதன்பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது மேற்கொள்ளப்போகும் திருத்தங்களுக்கமைய இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமனம் பெறுவர்.

(ii) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

4. **மாதாந்தச் சம்பளம்.**- அரசாங்க சேவை சுற்றறிக்கை இல. 06/2006 - பகுதி எஸ்எல்-1-2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டம் இதற்குப் பொருந்தும். சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) - ரூபா 22,935-10X645-8X790-17X1,050-ரூபா 53,555.

(அ) வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு பணிக்கமர்த்தப்படும் பரீட்சார்த்திகள் பின்வரும் சம்பள நிலையை அடையமுன் மூன்று தகுதிகாண் பரீட்சைகளில் சித்திபெறல் வேண்டும் :

முதலாவது தகுதிகாண் பரீட்சை ரூபா 24,870 ஐ அடைய முன்
இரண்டாவது தகுதிகாண் பரீட்சை ரூபா 26,805 ஐ அடைய முன்
மூன்றாவது தகுதிகாண் பரீட்சை ரூபா 31,965 ஐ அடைய முன்

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 20/2001 இன் பிரகாரம் உத்தியோகத்தர் நியமனம் பெற்ற மூன்று வருடத்திற்குள் முதலாவது தகுதிகாண் பரீட்சையில் சித்திபெற வேண்டியதுடன், இரண்டாவது தகுதிகாண் பரீட்சையை நியமனம் பெற்ற 6 வருடங்களுக்குள் சித்திபெறுதல் வேண்டும்.

(இ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 07/2007 இன் பிரகாரம் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் சேவையில் சேரும் அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியில் சேவையில் சேர்ந்து 5 வருடங்களுக்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

5. **ஆரோக்கியமும் நல்லொழுக்கமும்.**- விண்ணப்பதாரர் தான் திடமான ஆரோக்கியத்துடனும் சிறந்த நல்லொழுக்கமும் உடையவராக உள்ளார் என்பதனை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளருக்குத் திருப்திப்படுத்தல் வேண்டும். அவர் உலகின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குரிய உடல் நிலை உள்ளவராக இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படுவோர் விசேட மருத்துவ பரிசோதனை ஒன்றிற்கு உட்படுத்தப்படுவார்.

6. **தகைமை.**- விண்ணப்பதாரர் -

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒரு பட்டதாரி படிப்பை

(i) இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தில் பெற்றிருத்தல், அல்லது
(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்லைக்கழக மொன்றில் பெற்றிருத்தல். நேர்முகப் பரீட்சையின்போது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆவண அத்தாட்சியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவு திகதியன்று 22 வயதை உடையவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரெனில் அவர் விண்ணப்ப முடிவு திகதியன்று 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவரது சேவைக்காலம் நற்சேவை பதிவுகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்புகள்.**- (i) மேலே கூறப்பட்ட சரத்து 6 (இ) இன் பிரகாரம், ஏற்கனவே அரச சேவையில் உள்ளாரென்பது ; விண்ணப்ப முடிவு திகதியன்று அரச சேவையில் (தாபனக் கோவையின் அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டபடி), மத்திய அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தனது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவர் என்பதாகும்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருட அரச சேவைக் காலப்பகுதியில் திருப்திகரமான சேவைப் பதிவுகளை அற்றவர் அல்லது ஐந்து வருட சேவைக்கு குறைந்த காலத்தை உடையவராயின் அவர் தனது முழு அரச சேவைக் காலத்திலும் திருப்திகரமான சேவைப் பதிவை அற்றவராயின் ; இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராவர்.

(iii) அரச சேவையில் உள்ள ஒருவர் திருப்திகரமான சேவையை உடையவர் என்பது ; அவர் விண்ணப்ப முடிவு திகதிக்கு முதல் முன்னுள்ள ஐந்து வருடக் காலப்பகுதிக்குரிய தனது சம்பள உயர்ச்சியை உரிய காலங்களில் தவறாது பெற்றுள்ளார் என்பதும் அல்லது ஒருவர் தான் சேவையாற்றிய தாபனங்களில் ஐந்து வருட சேவைக் காலத்திற்குக் குறைவாயின் அம்முழுக் காலத்திற்கும் உரிய சம்பள உயர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அக்காலப்பகுதியில் குற்றங்கள், தண்டனை எதுவும் (எச்சரிக்கை தவிர) பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(iv) ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்கள/தாபனத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

7. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக ஒரு மாவட்ட செயலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 என்ற கணக்கிற்கு செலுத்தப்படல் வேண்டும். இக் கொடுப்பனவிற்காக பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருத்தல் சிறந்ததாகும்.

**குறிப்பு.**- விண்ணப்பதாரர் எதாவது காரணங்களின் நிமித்தம் பரீட்சையிலிருந்து வாபஸ் பெற்றாலோ அல்லது பரீட்சைக்குத் தோற்றி பின்னர் தகுதியற்றவர் எனக் காணப்பட்டாலோ அவரது பரீட்சைக் கட்டணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளப்பெற முடியாது.

8. **விண்ணப்பிக்கும் முறை.**- (அ) விண்ணப்பப்பத்திரத்தை இவ்வறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப, விண்ணப்பதாரர்கள் தாங்களே 8 1/2" x 12" (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கங்களிலும் தயாரிக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள 1-7 வரையிலான விடயங்கள் விண்ணப்பப்படிவத்தின் முதல் பக்கத்தில் இருப்பது அவசியமாகும்.

(ஆ) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழியிலேயே விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்பட வேண்டும்.

(இ) பரீட்சைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் (அமைப்பும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவும்), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2007, நவெம்பர் 9 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்" இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான பகிரங்க போட்டிப் பரீட்சை 2007" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இடதுபக்க மேல் மூலையில் (2x2செ.மீ.) ஒரு கூண்டு தயாரிக்கப்பட்டு அதனுள் ஆங்கில எழுத்து S எழுதப்பட வேண்டும். இம் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) முற்றிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப் படுவதற்கு இடமுண்டு. தபாலில் காணமாற்போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது. அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளில் வெளியிடப்படும். பத்திரிகை அறிவித்தல் பற்றி விழிப்பாக இருக்குமாறு விண்ணப்பதாரர்கள் கேட்கப்படுகின்றனர்.

பரீட்சை நடைபெறுவதற்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம் (அமைப்பும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவும்), பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும். (*தந்தி முகவரி* : "எக்ஸாம்ஸ்", பத்தரமுல்லை) :

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பப்பத்திரம் அனுப்பிய திகதியும், பதிவுத் தபால் இலக்கமும் அனுப்பிய அஞ்சல் அலுவலகமும்.

9. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**- (அ) பரீட்சைக்குத் தோற்ற தகுதி பெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்கு சமூகமளிக்கும் விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர் பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குச் சமூகமளிக்கும் முதல் நாளன்று அப் பரீட்சை மண்டபத்திற்கான அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டும். பரீட்சார்த்திகளால் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிக்கோவையொன்று இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு.**- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றத் தேவைப்படும் சகல தகைமைகளையும் கொண்டவர் என்னும் கருத்தைப் பிரதிபலிக்காது.

10. **பரீட்சார்த்திகளின் அடையாளத்தை நிரூபித்தல்.**- ஒரு பரீட்சார்த்தி தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தமது

அடையாளத்தை பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தி அடையும் வகையில் நிரூபிக்க வேண்டப்படுவர். இதற்கான பின்வரும் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை.**- பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது, பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடக்கும்பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்பட இடமுண்டு. பரீட்சார்த்தி கொடுத்துள்ள தகவல்கள் எதாவது அவர் அறிந்தவரை உண்மை அற்றதெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே உண்மைத் தகவல்களை மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் இடமுண்டு.

12. **பரீட்சை மொழி :**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் பரீட்சார்த்தி தான் தேர்ந்தெடுத்த ஒரு மொழியிலேயே பரீட்சையின் எல்லாப் பாடங்களையும் எழுத வேண்டும்.

13. **பரீட்சை முறைமை.**- *பகுதி I - எழுத்துமூலப் பரீட்சை*- இது பின்வரும் ஆறு (6) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| | *பாடங்கள்* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| (i) | பொது வினாத்தாள் | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (ii) | உலக விவகாரங்கள் I | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iii) | உலக விவகாரங்கள் II | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (iv) | கட்டுரை | 3 மணித்தியாலங்கள் | 100 |
| (v) | சுருக்கி எழுதுதல் | 1 மணித்தியாலம் | 100 |
| (vi) | பலவினத் தேர்வு வினாத்தாள் | 1 மணி 40 நிமிடம் | 100 |

**எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

(i) *பொது வினாத்தாள்.*- இவ் வினாத்தாள் பரீட்சார்த்தியின் இலங்கை அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழ்நிலை பற்றிய அவரது அறிவு பற்றியும், இன்றைய தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றியும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் அவரது அறிவைப் பரீட்சிப்பதாகும்.

(ii) *உலக விவகாரங்கள் I.*- உலக நோக்கான சமாதானம், பாதுகாப்பும் நாட்டு முன்னேற்றமும் மற்றும் இவை இலங்கைக்கு எப்படியான தாக்கத்தை ஏற்றுபடுத்துகின்றன என்பனவற்றையிட்டு ஆராய்ந்த கிரகிக்கும் தன்மையைப் பரீட்சாரத்தி கொண்டுள்ளாரா என்பதனைப் பரீட்சிப்பதன் நோக்கில் ; உலகில் இன்றைய அரசியல் வளர்ச்சி, ஐக்கிய நாடுகள் சபை/ அரசாங்கங்களுக்கிடையேயான தாபனங்கள், முரண்பாட்டு சூழ்நிலைகள் மற்றும் தேசிய சர்வதேச இயக்கங்களின் வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்கியதாக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும்.

(iii) *உலக விவகாரங்கள் II.*- அண்மைக்காலத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார முன்னேற்றப் போக்குத்துறையில் சர்வதேச/ அரசாங்கங்களுக்கிடையேயான தாபனங்கள் ஆற்றிய பங்களிப்பு, பிராந்திய பொருளாதார கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தும் தாக்கம், சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தியும் இவை இலங்கைக்கு எவ்வகையில் சம்பந்தப்படுகின்றது போன்றவற்றை உள்ளடக்கியதாக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும்.

(iv) *கட்டுரை.*- குறிக்கப்பட்ட ஒன்று அல்லது மேற்பட்ட விடயங்கள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுதல் வேண்டும். கட்டுரையானது ஒரு விடய தள படிப்பாக இருக்காது. ஆனால் பரீட்சார்த்தியின் பொது அறிவு வல்லமை மிக்க சிந்தனை மற்றும் சொற் கூற்று, பொது ஆற்றல் போன்றவற்றைக் கணிக்கும் வகையில் கட்டுரை எழுதுதல் அமைந்திருக்கும். கட்டுரை எழுதுவதில் சுயமான கருத்துக்களை அறிமுகப்படுத்தும் திறமை, சுய ஆக்கம், மொழி நடை, அதன் அமைப்பு ஆகியவை மூலம், கட்டுரையின் தன்மை என்பனவும் கணிக்கப்படும். அது தெளிவாகவும் பிழைகள் இன்றியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**- விடயத்திற்கு உகந்த தன்மையும் தெளிவாகவும் இருத்தலின் அவசியத்தை பரீட்சார்த்திகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றது. விடயத்தை பகுத்து ஆராய்ந்து அறிகின்ற சிந்தனை, தரமான எழுத்து மற்றும் தெளிவும் விளக்கமும் உள்ள கட்டுரைகள் மதிப்பெண்களைப் பெறும்.

(v) *சுருக்கி எழுதுதல்.*- இரு பகுதிகளைக் கொண்ட இவ் வினாத்தாள் தரப்பட்ட பந்தியின் கருத்தை கிரகித்து அதனைத் திறமையாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்து வதற்குப் பரீட்சார்த்திக்குள்ள திறமையைப் பரீட்சிப்ப தற்கானதாகும்.

(vi) *பலவினத் தேர்வு வினாத்தாள்.*- கீழே குறிப்பிடப்படும் இரு பகுதிகளைக் கொண்ட இவ் வினாத்தாள் பொருள் அமைந்த வினாக்களைக் கொண்டிருப்பதுடன் ஒவ்வொரு பகுதியும் 50 புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

(அ) விவேக அளவு.- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் பகுத்தறிவுத் திறனையும் மதிப்பீடு செய்வதற்கான வினாத்தாளாக அமையும்.

(ஆ) பொது அறிவும் நடப்பு விவகாரங்களும்.- உள்ளூரிலும் சர்வதேச அரங்கிலும் காணப்படும் அரசியல், பொருளாதார, சமூக கலாச்சாரத் துறைகளிலான நடப்பு அபிவிருத்திகள் பற்றி பரீட்சார்த்தியின் அறிவைப் பரீட்சிப்பதற்கான வினாத்தாளாக இது அமையும்.

14. *பகுதி II* - **நேர்முகப் பரீட்சை.**- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் பரீட்சார்த்திகளுடன் பொதுவான விடயங்களில் நேர்முக உரையாடல் நடைபெறும். இந்த நேர்முக உரையாடலின் நோக்கம் பரீட்சார்த்தி பொறுப்பேற்க உள்ள பதவிக்குப் பொருத்தமானவரா என அவரது தகுதியை மதிப்பிடவும், அத்தகைய மதிப்பீட்டின் போது அவரது விவேகம், மனவிழிப்பு, தோற்றம் மற்றும் ஆளுமையில் அவரது தகைமை, என்பனவற்றை நேரில் அறிவதற்காகவுமாகும்.

பரீட்சார்த்தியின் பிறநாட்டு மொழிகளிலான தகைமை, உயர்தரக் கல்வித் தகைமை மற்றும் கணனி பிரயோக சாகித்தியம் என்பன நேர்முகப் பரீட்சையின் போது கருத்திற்கொள்ளப்படும். (பந்தி 2 இன் II ஐப் பார்க்கவும்)

15. **நியமனத்திற்கு தெரிவு செய்யும் முறை.**- எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற மொத்தப் புள்ளிகளுடன் நேர்முகப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளும் கூட்டப்பட்டு பெற்ற முழுப் புள்ளிகளின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். நியமனத்திற்கான இறுதித் தெரிவு அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

16. இந்த வர்த்தமானி அறிவித்தலில் வழங்கத்தவறிய விடயங்கள் ஏதும் இருப்பின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவூட்டுதல் களுக்கமைய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். இச்சேவைக்கான வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கான, அதன் பகுதியை நிரப்புவதற்கான அல்லது ஒரு வெற்றிடத்தையேனும் நிரப்பாது விடுவதற்கான உரிமை அரசாங்க ஆணைக்குழுவிற்கு உரித்தானதாகும்.

**குறிப்பு**.- "இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2007" இற்கான விண்ணப்பங்கள் 2007.06.08 ஆந் திகதிய இல. 1501 வர்த்தமானி வெளியீட்டின் மூலம் கோரப்பட்டிருந்ததன் பிரகாரம் முன்னரே விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருப்பின் அவை செல்லுபடி யானதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ரீ. பீ. மடுவேகெதர,
பதில் செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
கொழும்பு 1,
2007.09.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு**

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2007

பரீட்சை எழுதும் மொழி மூலம்
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4) [ ]
கூட்டில் சரியான இலக்கத்தை எழுதவும்.

சுட்டிலக்கம் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) (அ) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் :-----.
(ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்)
(ஆ) முதலெழுத்துக்களுடன் கடைசிப்பெயர் :-----.
(சிங்களம்/ தமிழ் மொழியில்)

(ii) (அ) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் :-----.
(ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்)
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
(சிங்களம்/ தமிழ் மொழியில்)

2. முகவரி :-
(i) தனிப்பட்ட (ஆங்கில "கெப்பிட்டல்" எழுத்தில்) :-----.
(அனுமதி அட்டைகள் இவ் விலாசத்திற்கு அனுப்பி வைக் கப்படும்)

(ii) அலுவலக :-----.

(iii) தொலைபேசி இலக்கங்கள் :-
அலுவலகம் :-----. வதிவிடம் :-----.

3. பால் :-----. [ ]
(ஆண்-0, பெண்-1)
சரியான இலக்கத்தை கூட்டில் எழுதவும்

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

(ii) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

6. தேசிய இனம் :-----.

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-----.

8. இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு நியமனம் பெற, முன்னர் பரீட்சைக்குத் தோற்றி இருந்தால் அதன் திகதி/ திகதிகள் குறிப்பிடுக :-

(அ) :-----.
(ஆ) :-----.
(இ) :-----.

9. நீர் ஒரு பட்டதாரியும் அரசாங்க சேவையில் இருப்பவராயும் இருந்தால் சேவையின் பெயரைக் குறிப்பிடுக :-----.

10. பல்கலைக்கழக விபரங்கள் :-
(இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ளீரா என்பதை உறுதி செய்ய தயவுசெய்து இவ்வறிவித்தலின் (ஆ) (i) மற்றும் (ii) பகுதி களைக் கவனிக்கவும்)

(i) பல்கலைக்கழகத்தின் பெயர் :-----.
(ii) பட்டப்படிப்பு :-----.
(iii) பட்டம் பெற்ற திகதி :-----.
(iv) பொது/விசேடம் :-----.
(v) பாடங்கள் :-----.
(vi) வகுப்பு :-----.

11. வேறு தகைமைகளான கல்விசார் /உயர் தொழில்சார் மற்றும் பிற (பின்பட்டதாரி/டிப்ளோமா, பிறநாட்டு மொழிகளில் புலமை என்பன) இருப்பின் அதன் விபரங்கள் தருக :-----.

12. எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் இவ் விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று உறுதிமொழிவதுடன் நான் பரீட்சைக் கட்டணம் செலுத்திய 2007 ...................... ஆந் திகதிய ............. இலக்க பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன். நான் இப்பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைய நடப்பேனென்றும்,

இப்பிரமாணங்களுக்கமைய நான் தகைமையற்றவராகக் காணப்படுமிடத்து பரீட்சைக்கு முன்போ, பரீட்சையின்போதோ அல்லது பின்போ பரீட்சார்த்தி நிலையிலிருந்து என்னை நீக்குவதற்கு எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டுள்ளேன் எனவும் இணக்கம் தெரிவிக்கின்றேன்.

| தயவுசெய்து பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

.........................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

13. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
(ஏற்கனவே அரசாங்க சேவை/ மாகாண சபை /அரச சேவைகளில் உள்ள பரீட்சார்த்திகளுக்கு மட்டும்)

திரு./ திருமதி/ செல்வி ..................................................................
2007 ........... ஆந் திகதிக்கு முன்னுள்ள ஐந்து வருடங்களில்/ ......................வருடங்களில்-

(அ) தனது சகல சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார் என்பதையும்

(ஆ) எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதனையும்

பதிவேடுகளிலிருந்து உறுதி செய்துகொண்டேன்.

விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

உத்தியோகத்தர் தெரிவாகுமிடத்து அவரை தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும்.

.........................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

10-463

---

**உயர் கல்வி அமைச்சு**

தொழில்சார் வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (SLIATE)

**உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2008**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (இ. உ. தொ. க. நி.) நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு, 2004 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க. பொ. த. (உ. த) பரீட்சையில் சித்தியடைந்த (புதிய/பழைய பாடத்திட்டம்) மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் முறை**.- கீழே காணப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை உரிய உயர் தொழில் நுட்ப நிறுவன/பிரிவுக்கு ("அ" பிரிவில் காட்டப்பட்டுள்ளன) (கொழும்பு) பார்க் வீதி, மக்கள் வங்கி கிளை அல்லது எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் 0025-100133397613 SLIATE கணக்கு இலக்கத்துக்கு செலுத்தப்பட்ட ரூ 250க்கான ரசீதை இணைத்து பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பாட நெறியை" குறிப்பிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக ரூ. 250 கட்டணத்தை செலுத்தி ரசீதுகளை இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்துக்கு மாறாக வேறு இலக்கங்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

"பகுதி அ" பிரிவில், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான உயர் தொழிலில்நுட்ப நிறுவனங்களினதும்/ நிறுவனப் பிரிவுகளினதும் முகவரிகளும் நடாத்தப்படும் பாடநெறிகள் தொடர்பான விபரங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் விண்ணப்பதாரிகள் "பகுதி ஆ" வில் குறிப்பிடப்படும் பாடநெறிகளை மட்டுமே தகைமைப்பிரகாரம் தெரிவுசெய்ய வேண்டும்.

**விரிவுரைகள் இடம்பெறும் முறைமை :**

காலை/முழுநேரக் கற்கைநெறி : கிழமை நாட்களில் காலை நேரங்களில்

பகுதிநேரக் கற்கைநெறி : வார இறுதி நாட்களில் ; காலை நேரங்களில்.

(பகுதிநேரக் கற்கைநெறிகள் உரிய துறையில் தொழில் புரிவோருக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.)

***கற்கைநெறிகளுக்கான கட்டணங்கள்.***- காலை நேரக் கற்கைநெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது. பகுதிநேர மாணவர்களிடமிருந்து ஒவ்வொரு தவணைக்கும் ரூபா 2,000 வீதம் அறவிடப்படும். (வருடத்திற்கு இரண்டு தவணைகள்) இக்கட்டணங்கள் வருடாந்த திருத்தத்திற்கு உட்பட்டது.

***நேர்முகப் பரீட்சை.***- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோர் தேர்வுப் பரீட்சை அத்துடன் / அல்லது நேர்முகப் பரீட்சைக்கு ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட Z ஸ்கோர் அல்லது புள்ளிகளின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். இது தொடர்பான திகதி, நேரம், இடம், சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள் போன்ற விபரங்கள் எழுத்து மூலம் அறிவிக்கப்படும். மூலப்பிரதி இல்லாத பட்சத்தில் மூலப்பிரதிகள் மாணவர்கள் பதவின்போது சமர்ப்பிக்கப்படும் என்ற அடிப்படையில் அதன் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

***தங்குமிட வசதிகள்.***- பின்வரும் நிறுவனங்களில் தகுதிவாய்ந்த முழுநேர மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தங்குமிட வசதிகள் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விடுதி வசதிகள் நிறுவனத்திற்கும் அவரின் வீட்டுக்குமிடைப்பட்ட தூரத்தின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும்.

அம்பாறை ஹாடி நிறுவனத்தில் ஆண், பெண் தங்குமிட வசதிகளும் நய்வலை, தெகிவளை நிறுவனங்களில் பெண்களுக்கு மட்டுமான தங்குமிட வசதிகளும் உள்ளன.

***பகுதி "அ"***

**உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் / உயர்தொழில் நுட்ப பகுதிகளின் குறியீட்டு இலக்கம், தொலைபேசி இல. மற்றும் முகவரி கீழே தரப்பட்டுள்ளன :-**

| நிறுவக இல. | நிறுவகத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இல. |
|---|---|---|---|
| 01. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2738349 |
| 02. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், காலி | களுவெல்ல, காலி | 091-2223774 |
| 03. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2226644 |
| 04. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், குருநாகல் | இல. 22/1, வெலிகொட வீதி, குருநாகல் | 037-2224911 |
| 05. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், பதுளை | கிறீன்லண்ட் ஒழுங்கை, பதுளை | 055-2230218 |
| 06. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம் | இல. 78, பலாலி வீதி, யாழ்ப்பாணம் | 021-2222595 |
| 07. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், நெய்வலை | நெய்வலை, எஸ்ஸல்ல, வியாங்கொடை | 033-2292544 |
| 08. | ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறை | இங்கினியாகல வீதி, அம்பாறை | 063-2222056 |
| 09. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், திருகோணமலை. | செல்வநாயகப் புரம் உப்புவெளி, திருகோணமலை | 026-2223232 |
| 10. | உயர்தொழில்நுட்ப நிறுவனம், லபுதுவ | சிறிதம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன | 091-2246180 |
| 11. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, புதிய நகர், அநுராதபுரம் | 025-2234417 |
| 12. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, வரகாபொல | தொழில்நுட்பக் கல்லூரி, அம்பகல வீதி, வறக்காப்பொலை | 035-2267651 |
| 13. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, இரத்தினபுரி | தொழில்நுட்பக் கல்லூரி, கொழும்பு வீதி, இரத்தினபுரி | 045-2232390 |
| 14. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, களுத்துறை | தொழில்நுட்பக் கல்லூரி, காலமுல்ல, களுத்துறை | 034-2222325 |
| 15. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, பெலிஅத்தை | தொழில்நுட்பக் கல்லூரி, புவக்கந்தாவ பெலிஅத்த | 047-2243229 |
| 16. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, சம்மாந்துறை | தொழில்நுட்பக் கல்லூரி, பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 |
| 17. | உயர்தொழில்நுட்ப நிறுவனப் பகுதி, மட்டக்களப்பு | தொழில்நுட்பக் கல்லூரி, மட்டக்களப்பு | 065-2247877 |

***(2008 தொடக்கம் வரக்காப்பொல ATI பிரிவு கேகாலைக்கு மாற்றப்பட்டுள்ளது)***

**பாடநெறிகளின் பெயர்களும் நிறுவகங்களின் இலக்கங்களும்:**

| பாடநெறிகளின் பெயர் | காலம் | நடாத்தப்படும் பாட நெறிகளுக்கான நிறுவன இலக்கங்கள் |
|---|---|---|
| 1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - (உ.தே.க.டி) - காலை/முழு நேரம் | 4 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 16, 17 |
| 1.1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - (உ.தே.க.டி) - பகுதி நேரம் | 4 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 9, 11, 12, 13, 14, 15, 16, 17 |
| 2. உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா - (உ.தே.மு.டி) - காலை/முழு நேரம் (ஆங்கில மொழிமூலம்) | 4 வருடங்கள் | 1, 2, 3, 5, 6 |
| 3. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (உ. தே. த. தொ.டி) - காலை/முழு நேரம் (ஆங்கில மொழி மூலம்) | 2 1/2 வருடங்கள் | 3, 4, 5, 6, 7, 8, 9, 10 |
| 4. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா - விவசாயம் (தே.தொ.டி) - காலை/முழு நேரம் (ஆங்கில மொழி மூலம்) | 3 வருடங்கள் | 7, 8, 10 |
| 5. தேசிய ஆங்கில டிப்ளோமா - (தே.ஆ.டி) - காலை /முழு நேரம் | 2 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 8 |
| 5.1. தேசிய ஆங்கில டிப்ளோமா - (தே. ஆ. டி) - பகுதி நேரம் | 2 வருடங்கள் | 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 11, 12, 14, 15, 16, 17 |
| 6. தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா - (தே.வி.க.டி) - காலை/முழு நேரம் (ஆங்கிலம்) | 3 வருடங்கள் | 1, 2, 3, 5, 6 |
| 7. தேசிய வியாபார நிதி டிப்ளோமா - (தே.வி.நி.டி)- காலை /முழு நேரம் (ஆங்கில மொழிமூலம்) | 2 வருடங்கள் | 1 |

**குறிப்பு :**

(1) சகல பாடநெறிகளின் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படும். மீளாய்வு செய்யப்பட்ட சில பாடநெறிகள் 2008 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். அத்துடன் இப்பாடநெறிகளின் காலம் மாறலாம்.

(2) முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (காலை/முழுநேரம்) இன் மொழிமூலமானது வார நாட்களில் சிங்களம் அல்லது தமிழில் நடாத்தப்படும். மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் ஆங்கில மொழி மூலமும் மற்றும் அவை வார இறுதி நாட்களில் நடைபெறும்.

(3) உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (காலை/முழுநேரம்) பாடநெறியின் முதலாம் மற்றும் 2 ஆம் ஆண்டு வார நாட்களில் காலை வேளையில் நடாத்தப்படும். மேலும் 3 ஆம் மற்றும் இறுதி ஆண்டானது வார இறுதி நாட்களில் நடைபெறும்.

(4) க. பொ. த. (உ. த.) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் தகைமையடைந்த விண்ணப்பதாரிகள், பொதுப் பரீட்சைத் தாளில் ஒரு சித்தியை பெற்றிருத்தல் அவசியம்.

(5) க. பொ. த. (உ/ த.) பரீட்சையில் பெற்ற Z Score அல்லது சராசரி புள்ளிகளின் அடிப்படையிலேயே தேர்வுகள் மேற்கொள்ளப்படும்.

(6) தகைமை பரீட்சையில் பாடத்தில் அல்லது பாடநெறிக்கு சம்பந்தமான துறையில் சித்தியடைந்த விண்ணபதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(7) காலை நேர பாடநெறிகளுக்காக 22 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(8) எந்தவொரு இலங்கைப் பல்கலைக்கழக /இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில், தொழில்நுட்ப கல்லூரி, கல்விக் கல்லூரி/ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அல்லது ஏனைய மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒரு உள்ளக மாணவராக ஒரு பாடநெறியொன்றைப் பின்பற்றுபவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஒரு காலை/முழுநேர மாணவனாக பதிவுசெய்துகொள்ள முடியாது. சொல்லப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனங்களில் முழுநேர பாடநெறிகளை ஏதும் மாணவரொருவர் மேற்கொள்வது தெரியவரின் அவர்களின் பதிவுகள் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இரத்துச் செய்யப்படும்.

(9) முழுநேர பாடநெறிக்காக தெரிவுசெய்யப்பட்ட பின்னர், மாணவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் வேறு எந்த ATI நிறுவனத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள்.

***பகுதி 'ஆ'***

***மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்கான தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன :***

*1. **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா - (உ.தே.க.டி) - காலை/முழுநேரம் :***

*விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-*

(i) *ஒரே முறையில் தூய கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு நான்கு பாடங்களில்' க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) இல் திறமைச்சித்தி அடைந்திருக்க வேண்டும் ;*

*தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்காவிடில் க. பொ. த. (சா./த.) இப்பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் கருத்தில் கொள்ளப்படும்.*

*க. பொ. த. (உ./த.) பரீட்சையில் தூய கணிதம் அல்லது கணக்கியல் ஆகிய பாடங்களில் திறமை சித்தி பெற்றிருக்காவிடில், க. பொ. த. (சா./த.) கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.*

*அல்லது*

(ii) *க. பொ. த. (உ/த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் மூன்று பாடங்களில் இணைந்த கணிதம் அல்லது கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருக்க வேண்டும். இம்மூன்று பாடங்களில் இரண்டு திறமைச்சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*க. பொ. த. (உ./த.) இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருக்காவிடில், க. பொ. த. (சா./த.) கணித பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.*

*அல்லது*

(iii) *தொழிற்கல்வி பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.*

*அத்துடன்*

*க. பொ. த. (சா./த.) ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.*

*க. பொ. த. (உ./த.) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் பெற்ற ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையிலே தெரிவுகள் இடம்பெறும்.*

*1.1 **உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (உ.தே.க.டி) - பகுதி நேரம் :***

*விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-*

(i) *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது இடைநிலைப் பரீட்சை ;*

(ii) *க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டத்தில்) /மூன்று பாடங்களில் (புதிய பாடத்திட்டத்தில்) சித்தியடைந்திருக்க வேண்டும் ;*

(iii) *தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ்;*

(iv) *தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் வர்த்தகக் கல்வி தொடர்பான தேசிய சான்றிதழ் (கணக்கியல் துறை) ; தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்படும் கணக்கியல் தொடர்பான தேசிய சான்றிதழ் ;*

***குறிப்பு :***

*(அ)* ***தொழில் அனுபவம் :-*** *விண்ணப்பதாரிகள் பொருத்தமான அரச நிறுவனம் ஒன்றில் /பொது நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கடமையாற்றியிருத்தல் வேண்டும்.*

(ஆ) பின்வரும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் முதலாம் வருடத்திலிருந்து விலக்களிக்கப்பட்டு இக்கற்கை நெறியின் இரண்டாம் வருடத்திற்கு ஏனைய அனுமதித் தகைமைகளைப் பூர்த்திசெய்து இடமிருப்பின் அனுமதிக்கப்படுவர் :-

(i) வியாபாரக் கற்கை/ நிதி தொடர்பான தேசிய டிப்ளோமா ;

(ii) உயர் தேசிய வர்த்தக /முகாமைத்துவ டிப்ளோமா இரண்டாம் ஆண்டு ;

(iii) விஞ்ஞானமாணி (வியாபார நிர்வாகம்) ;

(iv) வணிகமாணி ;

(v) விஞ்ஞானமாணி (கணக்கியல்)

(vi) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (ICASL) 1 ஆம், 2 ஆம் பகுதி ;

(vii) பட்டயக் கணக்காளர், கணக்கியல் நிறுவனத்தின் (CIMA) 1 ஆம், 2 ஆம் பகுதி ;

(viii) இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் (AAT) 3 ஆம் கட்டப் பகுதி ;

***2. தேசிய உயர் முகாமைத்துவ டிப்ளோமா ( தே.உ.மு.டி) - (காலை /முழு நேரம் ) :***

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./ த.) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்களில் க. பொ. த. (உ./த.) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தில் ஒரே முறையில் மூன்று பாடங்களிலும் க. பொ. த. (சா./த.) ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் அல்லது வியாபார கற்கைநெறிக்கான தேசிய சான்றிதழ் (பொது நிர்வாகம், சந்தைப்படுத்தல்) அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம், கணிதத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

***3. உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - (உ.தே.த.தொ.டி) - (காலை /முழு நேரம் ) :***

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்,/*விவசாய விஞ்ஞானம், தூயகணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் :-

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்,/*விவசாய விஞ்ஞானம், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iii) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்,/*விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், கணக்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அல்லது

(iv) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) ஒரே முறையில் பௌதீகவியல்,/*விவசாய விஞ்ஞானம், தாவரவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றினை உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(v) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் சாதாரண சித்தி.

* 1995 ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்தின்கீழ் செயற்படுத்தப்படும் க. பொ. த. (உ./த.) விவசாய விஞ்ஞானம்.

*4. உயர் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (உ. தே.தொ.டி.-விவசாயம்) - (பகல் /முழு நேரம்) :*

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) உயிரியல் விஞ்ஞானத்தில் ஒரே முறையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) உயிரியல்-விஞ்ஞானத்தில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களாக அமைதல் வேண்டும் :-

அத்துடன்

(iii) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

5. ***உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HND in English) - (காலை/பகுதி நேரம்) :***

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட 3 பாடங்களில் சித்தி ;

(ii) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில இலக்கியத்தில் சித்தியும் ஆங்கில மொழியில் திறமை சித்தி (C);

(iii) க. பொ. த. (உ./ த.) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் விசேட சித்தியடைந்திருத்தல் (A அல்லது B);

(iv) ஆங்கில சிறப்பு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரியர்களுக்கான கல்விக் கல்லூரி டிப்ளோமா ;

(v) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தக கைத்தொழிலும் மேலதிகக் கல்வியும் தொடர்பான ஆங்கிலத்தில் தேசிய சான்றிதழ் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

*6. உயர் தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா - (காலை /முழு நேரம்) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ./த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகமும் நிதியியலும், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் அதே பரீட்சையில் அரசியல் விஞ்ஞானம், தூய கணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், தர்க்கசாஸ்திரம், விஞ்ஞானமும் வரலாறு வியாபாரம் கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) க. பொ. த. (உ./த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தக கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது க. பொ. த. (உ./ த.) பரீட்சையில் மேலுள்ள மூன்று பாடங்களில் இரண்டு பாடங்களிலும் புவியியல், மனை யியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்காசஸ்திரம், விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், வியாபாரக் கணிப்பீடு ஆகிய பாடங்களில் ஒன்றிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி.

*7. வர்த்தகமும் நிதியியலிலுமான தேசிய டிப்ளோமா (வ.நி.தே.டி) - (காலை /முழு நேரம்) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) (பழைய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியலும் நிதியியலும் உட்பட நான்கு பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

(ii) க. பொ. த. (உ. த.) (புதிய பாடத்திட்டம்) பரீட்சையில் பொருளியல், வர்த்தகக் கற்கைகள், கணக்கியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தி அல்லது மேலே குறிப்பிட்டுள்ள பாடங்களில் இரண்டு பாடங்களிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஒரு பாடத்திலும் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவியியல், மனைப் பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திர விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ;

அல்லது

(iii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான தேசிய சான்றிதழ் ;

அத்துடன்

(iv) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்திலும் கணிதத்திலும் சாதாரண சித்தி.

*8. தேசிய போஷாக்கு சுகாதார விஞ்ஞான டிப்ளோமா (முழு நேரம்) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிக்க வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பழைய பாடத்திட்டல் ஒரே முறையில் மனைப்பொருளியல் திறமைச் சித்தியுடன் நான்கு பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தில் ஒரே முறையில் மனைப்பொருளியல் திறமைச் சித்தியுடன் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா/த) ஆங்கிலத்தில் சாதாரண சித்தி

*9. தேசிய செயலாண்மை பயிற்சியில் டிப்ளோமா - தே. செ. ப. டி. ( பகுதிநேரம் /வார இறுதி) :*

விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளில் ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) க. பொ. த. (உ./த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியுடன் க. பொ. த. (சா.த.) இல் ஆங்கிலத்தில் சித்தியும் குறித்த துறையில் அனுபவத்தினையும் கொண்டிருக்க வேண்டும் ;

(ii) தொழிற்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் செயலாண்மைப் பயிற்சியில் தேசிய சான்றிதழ் குறித்த துறையில் அனுபவம் ;

(iii) வர்த்தகத்தில் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ் க. பொ. த. (சா.த.) ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி ;

(iv) தொழிற்கல்வி பயறிச்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி தொடர்பான தேசிய சான்றிதழ் (ஆங்கிலமொழி மூலமான தட்டெழுத்து, சுருக்கெழுத்து) அத்துடன் குறித்த துறையில் அனுபவம் ;

(v) தொழில்கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் சுருக்கெழுத்தாளர் தேசிய சான்றிதழ் பாடநெறி (ஆங்கில மொழி மூலம்) ;

(vi) அரச சேவையில் ஆகக் குறைந்தது இரண்டு வருடம் அனுபவம் உள்ள ஆங்கில மொழி மூலமான சுருக்கெழுத்தாளர்கள் ;

(vii) இலங்கை தொழில்நுட்பச் சேவையில் உள்ள சுருக்கெழுத்து தட்டெழுத்து (ஆங்கிலம்) போதனாசிரியர்கள்

(viii) க. பொ. த. (சா.த) பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியுடன் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையில் உள்ள சுருக்கெழுத்து தட்டெழுத்து (சிங்களம்) போதனாசிரியர்கள்.

**குறிப்பு :**

(1) யாழ்ப்பாணம், திருகோணமலை, சம்மாந்துறை மற்றும் மட்டக்களப்பு தெஹிவளை ஆகிய உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் நடாத்தப்படும் பகுதி நேர பாடநெறிகள் தமிழ் மொழி மூலம் நடாத்தப்படும்.

(2) ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட (சாதாரண சித்தி) வர்த்தக பட்டப்படிப்புக்கு சமனான 1990 ஒற்றோபர் 30 46/90 சுற்று நிருபத்தால் செல்லுபடியாக்கப்பட்ட கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்.

(3) தெஹிவளை மற்றும் கண்டி உயர்தொழில்நுட்ப நிறுவனங்களால் கணக்கியல் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பகுதிநேர பாடநெறிகள் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் மூலம் நடத்தப்படும்.

(4) உங்கள் தகுதி அடிப்படையில் உங்களால் குறிப்பிடப்படும் கல்வி திட்டங்களுக்கான தெரிவுகள் பிரவேசங்களுக்காக ஆலோசிக்கப்படும்.

*அதிகமான பாடநெறிகள் ஆங்கில மொழி மூலமே நடைபெறும் *தகவல்தொழிநுட்ப எல்லா பாடநெறிகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது *6 மாதகால பிரயோக பயிற்சி பாடநெறி *அரசாங்க மற்றும் தனியார் துறை வேலைகளுக்கு நல்ல வாய்ப்பு

2008 கல்வியாண்டு உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள்/பயிற்சிக்கு மாணவர்களை அனுமதித்தல் சம்பந்தமாக (SLIATE) இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்ப்பே இறுதியானதென்பதை தயவு செய்து கவனிக்கவும். இந்த அறிவித்தல் 2007.10.12 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 26.10.2007.

எச். ரீ. கமால் பத்மசிறீ,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்.

18/2, வோட் பிளேஸ்,
கொழும்பு 7
இணையத்தளம் : www.sliate.net

Course Number : ……………………

Office use only

மாதிரி விண்ணப்பப்படிவம்

SPECIMEN APPLICATION FORM

## SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION

### Application for Admission to Higher National Diploma/National Diploma Course

*Name of the Institute* *Institute Section :* ..................................................

| *Name of the Course* | *Order of Preference* | *Medium* |
|---|---|---|
| (1) ……………………………… | ………………………………… | ………………………………… |
| (2) ……………………………… | ………………………………… | ………………………………… |
| (3) ……………………………… | ………………………………… | ………………………………… |

1. Name with Initials : ————
2. Name/Names denoted by Initials : ————
3. Address : ————
4. Date of Birth : Year ————, Month ————, Date ————.
   Age (as at 01.01.2008) Years ————, Months ————, Days ————.
5. National Identity Card No. : ————.
6. Sex : Male/Female

7. Administrative District : ————
8. (i) Results of G.C.E. (A/L) Examination (2006 or before)
Year : ———— Index No. : ———— Medium : ————

| *Subjects* | *Grade* |
|---|---|
| 1. ———— | ———— |
| 2. ———— | ———— |
| 3. ———— | ———— |
| 4. ———— | ———— |

If under new syllabus indicate pass or fail in the general paper : ————
Aggregate/Average marks or Z-Score of the above examination, issued by the Department of Examinations : ————.

(ii) Result of G.C.E. (O/L) Examination :
Year : ———— Index No. : ———— Medium : ————

| *Subjects* | *Grade* | *Subjects* | *Grade* |
|---|---|---|---|
| 1. ———— | ———— | 6. ———— | ———— |
| 2. ———— | ———— | 7. ———— | ———— |
| 3. ———— | ———— | 8. ———— | ———— |
| 4. ———— | ———— | 9. ———— | ———— |
| 5. ———— | ———— | 10. ———— | ———— |

9. Highest Qualification in English as a Subject : ————.

10. Details of Occupation :
(only for Part-time/Weekend Courses)
Post :
E.P.F. Number :
Place of Work and Address :
Date of Appointment :

I hereby declare that I am not following any other full-time course of study in any other State Institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other State Institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

————,
Signature of Applicant.

Date : ————.

(The Bank receipt for Rs. 250 payable to SLIATE should be annexed)

10-441

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.